மும்பையில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழாவில் திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் வீரமணி அவர்கள் கலந்து கொண்டார்கள் . வீரமணி அவர்களுக்கு மும்பை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பொறுப்பாளர் அலி ஷேக் மீரான் ,பொறுப்பு குழு உறுப்பினர்கள் ஜேம்ஸ்,வசந்தகுமார்,இளங்கோ,வதிலை பிரதாபன்,ஜெயின் ஆப்தீன், மெஹபூப்,பாபு,சிவகுமார்,முஸ்டாக் பாய் மற்றும் தோழர்கள் பூங்கொத்து நினைவுப் பரிசு அளித்து சிறப்பித்தனர்.



அண்ணா நகர் மண்டலம், வார்டு 94ல் சிட்கோ நகர் 4 வது பிரதான சாலையில் புதிதாக கட்டப்பட்டு வரும் சமுதாய கூடத்தின் இறுதிக்கட்டப் பணிகளை நேற்று (04.01.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ. வெற்றி அழகன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் ஜெயின், மண்டல அலுவலர் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்!

முதல்வர் வழங்கிடும் தித்திக்கும் தேன்!

திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தேன்மொழி பொன். முத்துராமலிங்கம் அறிக்கை!

சென்னை, ஜன.5-

“தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத்திட்டம் முதல்வர் வழங்கிடும் தித்திக்கும் தேன்” என்று திராவிடக் கருத்தியல் ஆசிரியர் மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் தேன்மொழி பொன். முத்துராமலிங்கம் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

அரசின் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வதில் பெரும்பங்காற்றி வரும் அரசு ஊழியர்கள், வருங்காலத் தமிழகத்திற்கு வளமான தலைமுறைகளை உருவாக்குவதில் முக்கிய பங்காற்றும் ஆசிரியர்கள் ஆகியோர்களின் கால் நூற்றாண்டுக் கனவான ஓய்வூதியத்தை அறிவித்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உள்ளங்களில் வரும் பொங்கலுக்கு முன்பே மகிழ்ச்சியை வரவழைத்துள்ளார் போற்றுதலுக்குரிய தமிழ்நாடு அரசின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரின் வழித்தடத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு எப்பொழுதும் செயல்படும் இந்த திராவிட மாடல் அரசு என்பதை மீண்டும் அழுத்தமாக பதிவு செய்துள்ளார் முதலமைச்சர் அவர்கள்.

ஒவ்வொரு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வருங்காலத்தில் சுய மரியாதையோடு இச்சமூகத்தில் வாழ்வதற்கு ஆகச்சிறந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

இதன் மூலம் திரா விடத்தின் முக்கிய மூன்று முத்தான கொள்கை அடித்தளங்களான “பகுத்தறிவு, சமூகநீதி, சுயமரியாதை” ஆகியவை இச்சமுகத்தின் ஆணிவேராக இருக்க வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் வெளிப்பாடு தான் முதலமைச்சரின் போற்றுதலுக்குரிய அறிவிப்பாகும்.

திராவிட மாடல் அரசு உறுதியளித்துள்ள இந்த உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம் தொடர்புடைய ஒவ்வொருவரின் வாழ்விலும் தன்னம்பிக்கை, சுயமரியாதை, மகிழ்ச்சி ஆகிய இனிய சூழலை உருவாக்கியுள்ளது என்பதில் கிஞ்சித்தும் ஐயமில்லை

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் எதிர்கால வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான சூழலை இந்த அறிவிப்பின் மூலம் உருவாக்கிதந்த தமிழ்நாடு அரசின் போற்றுதலுக்குரிய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு திராவிடக் கருத்தியல் ஆசிரியர் சங்கத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

“என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” – இன்று

சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

அமைச்சர் – மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜன.5-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி இன்று 05.01.2026 திங்கட்கிழமை சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.

கொளத்தூர் கிழக்கு பகுதி

மாலை: 5.00 மணி: வட்டம் 68அ, பாகம்: 115. இடம்: ஜவகர் நகர் 2வது பிரதான சாலை, சென்னை-82.

மாலை: 5.00 மணி: வட்டம் 68அ, பாகம்: 116. இடம்: ஜவகர் நகர் 6வது பிரதான சாலை, சென்னை-82.

மாலை: 5.00 மணி: வட்டம் 70, பாகம்: 213. இடம்: 7, கொல்ந்தோட்டம், செம்பியம், பெரம்பூர், சென்னை-11.

மாலை: 5.30 மணி: வட்டம் 70, பாகம்: 214. இடம்: ஸ்கை மகால், வெங்கடேஸ் வரா நகர்,

மாலை: 6.00 மணி: வட்டம் 70, பாகம்: 231. இடம்: 46, பந்தர்கார்டன் மெயின் ரோடு, பெரம்பூர், சென்னை-11.

மாலை: 6.30 மணி: வட்டம் 70, பாகம்: 232. இடம்: 11, சுந்தர விநாயகர் கோயில் 2வது தெரு, பெரம்பூர், சென்னை-11.

கொளத்தூர் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 66 , பாகம் 88 , இடம்: சக்திவேல் நகர், பெரவள்ளூர், சென்னை-82.

மாலை: 4.30 மணி: வட்டம் 66 , பாகம் 89 , இடம்: குமரன் நகர், 80 அடி சாலை, பெரவள்ளூர், சென்னை-82.

மாலை: 5.00 மணி: வட்டம் 64 , பாகம் 17 , இடம்: நேதாஜி நகர் 1வது தெரு, வில்லிவாக்கம், சென்னை-49.

மாலை: 5.30 மணி: வட்டம் 65 , பாகம் 52 , இடம்: அஞ்சுகம் நகர், 15வது தெரு, கொளத்தூர், சென்னை-99.

மாலை: 6.00 மணி: வட்டம் 65 , பாகம் 77 , இடம்: சம்த்தியா காலனி, கொளத்தூர், சென்னை-99.

துறைமுகம் கிழக்கு பகுதி

மாலை: 6.30 மணி: வட்டம் 55 , பாகம்: 43, 46, 47, 48 , இடம்: எண்.1, பேரக்ஸ் முதல் சந்து, ஏழு கிணறு, சென்னை-1,

மாலை: 7.00 மணி: வட்டம் 60 , பாகம்: 107, 108, 109 , இடம்: 48, இப்ராஹிம் சாஹிப் 2வது தெரு, (ஈத்கா பள்ளி வாசல் பின்புறம்) கிளைவ்பேட்டரி, சென்னை-1,

துறைமுகம் மேற்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 59 , பாகம்: 160, 161, 162. இடம்: சிவசாகர் ஹோட்டல், வால்டாக்ஸ் ரோடு, சென்னை.

மாலை: 5.00 மணி: வட்டம் 59அ , பாகம்: 173, 174. இடம்: அண்ணா நினைவு மன்றம், சத்தியவாணி முத்து நகர், பல்லவன் சாலை, சென்னை.

எழும்பூர் வடக்கு பகுதி

மாலை: 4.00 மணி: வட்டம் 99அ , பாகம்: 122, 123, 124, 125

வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

மாலை: 5.00 மணி: வட்டம் 97அ , பாகம்: 190, 191 , இடம்: முத்தம்மன் கோயில் தெரு, பூபதி நகர், (யூனிடி அப்பார்ட்மென்ட் சக்கரவர்த்தி நகர்).

வில்லிவாக்கம் மேற்கு பகுதி

மாலை: 5.00 மணி: வட்டம் 95 , பாகம்: 6, 12, 70 , இடம்: அம்மன் கோயில் தெரு, தெற்கு மாடவீதி, வடக்கு திருமலை நகர்.

மாலை: 6.00 மணி: வட்டம் 95அ , பாகம்: 83, 86, 87. இடம்: குமாரசாமி நகர், சிவ சக்தி காலனி, ஆதிநாயுடு தெரு.

அம்பத்தூர் தெற்கு பகுதி

மாலை: 5.00 மணி: வட்டம் 93 , பாகம்: 340 , இடம்: 3வது பிளாக், நக்கீரன் சாலை

மாலை: 5.30 மணி: வட்டம் 93 , பாகம்: 342 , இடம்: 3வது பிளாக், புகழேந்தி சாலை

மாலை: 6.00 மணி: வட்டம் 93 , பாகம்: 347 , இடம்: 5வது பிளாக், பர்னர்சாலை

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட/ பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட தனியார் அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சேர்ந்த வீட்டு உரிமையாளர்கள் மற்றும் அக்குடியிருப்பில் வசிப்போர் கலந்துகொண்ட சிறப்பு குறை தீர்க்கும் கூட்டம் எழும்பூர், ஈ.வெ.ரா. சாலையில் அமைந்துள்ள பிரின்ஸ் கோர்ட்யார்டு அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்றது.

எழும்பூர் தொகுதியில் நூறுக்கும் மேற்பட்ட தனியார் அடுக்குமாடி

குடியிருப்பு நலச் சங்கப் பிரதிநிதிகளுடன் - இ.பரந்தாமன் எம்.எல்.ஏ., கலந்துரையாடல்!

உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திய திராவிட மாடல் அரசுக்கு சங்க நிர்வாகிகள் பாராட்டு!

சென்னை, ஜன.5-

கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட தனியார் அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சேர்ந்த வீட்டு உரிமையாளர்கள் மற்றும் அக்குடியிருப்பில் வசிப்போர் கலந்துகொண்ட சிறப்பு குறை தீர்க்கும் கூட்டம் எழும்பூர், ஈ.வெ.ரா. சாலையில் அமைந்துள்ள பிரின்ஸ் கோர்ட்யார்டு அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் நடைபெற்றது.

இச்சிறப்பு குறை தீர்க்கும் முகாம் குறித்த தகவலை எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் கடிதம் வாயிலாக பதினைந்து நாட்களுக்கு முன்னரே தனது தொகுதிக்குட்பட்ட நூறுக்கும் மேற்பட்ட குடியிருப்போர் நலச் சங்கப் பிரதிநிதிகளுக்கு அனுப்பி வைத்ததோடு, தனிப்பட்ட ரீதியில் அவர்களைத் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு அவர்களது பங்கேற்பு குறித்து உறுதி செய்தார். இதனைத் தொடர்ந்து இச்சிறப்பு குறை தீர்க்கும் கூட்டம் இன்று நடைபெற்றது.

எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தலைமையிலும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இச்சிறப்பு குறை தீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்ட அடுக்குமாடிக் குடியிருப்போர் நலச் சங்க நிர்வாகிகளும் பிரதிநிதிகளும் குடிநீர் வழங்கல், கழிவுநீர் வெளியேற்றம், சாலை, பூங்கா வசதிகள், தெருநாய் தொல்லை உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்தனர். அக்கோரிக்கைகளைத் தீர்ப்பது குறித்து சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் அவர்களிடம் கலந்துரையாடினார்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட குடியிருப்போர் நலச்சங்கங்களின் பிரிதிநிதிகள் மேற்கண்ட தமது தேவைகளைத் தெரிவித்த அதே சமயத்தில், “தற்போது நடைபெற்று வரும் ஆட்சியில் பெரும்பான்மையான அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதென்றும், எளிதாகத் தீர்க்கக்கூடிய சிறு சிறு குறைபாடுகள் மட்டுமே நிலவுவதாகவும்” குறிப்பிட்டார்கள்.

மேலும், “2021இல் தி.மு.க. அரசு பொறுப்பேற்ற காலத்தில் இருந்த நிலைமையையும் தற்போதைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது கடந்த நான்கரை ஆண்டுகளில் உட்கட்டமைப்பு வசதிகளில் பெருமளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது” என மகிழ்வுடன் சுட்டிக் காட்டினர்கள்.

குடியிருப்போர் நலச் சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டிய குறைபாடுகள் மற்றும் அவர்களது தேவைகள் குறித்துப் பேசிய சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், “இவை அனைத்தும் உடனடியாக நிவர்த்தி செய்யக்கூடிய விஷயங்கள்தான். பொதுமக்களோடு சட்டமன்ற உறுப்பினர் தொடர்பில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிக்கக்கூடியவர்கள் சட்டமன்ற உறுப்பினரை எளிதில் அணுக முடியும் என்பதற்காகவும் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இக்கூட்டம் மக்களுக்கும் பயனுள்ளதாகவும், அரசுக்கும் பயனுள்ளதாகவும் அமைந்திருக்கிறது” எனக் குறிப்பிட்டார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சி. சிட்டிபாபு
சனவரி 5 (1977)

தியாக மறவன் – கொள்கைக் குன்று – அண்ணா பெரும்படையின் அருந்தொண்டன் – தலைவர் கலைஞர் உடன் நின்று கழகப் பணியாற்றிய தோழன்.

சென்னை மாநகராட்சியின் மேயர், இருமுறை மக்களவை உறுப்பினர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், ‘கழகக்குரல்’ ஆசிரியர் உள்ளிட்ட பொறுப்புகளையேற்று சிறப்பாகப் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் அன்புக்குப் பாத்திரமானவராகத் திகழ்ந்தார்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக இருந்தபோது சிறைக் காவலர்கள் தாக்கியதில் படுகாயமுற்று மரணமடைந்தார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நத்தம் அ. இராசாமணி
சனவரி 5 (2016)

திராவிடர் கழகத்தில் தனது 14வது வயதில் சேர்ந்து, அதன்பின்னர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோருடன் பழகும் வாய்ப்பைப் பெற்று நத்தம் ஒன்றியக் கழகத் துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.